**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 32 /2020**

**PW 12**

| | | |
|---|---|---|
| Name | : | **கோவிந்தசாமி** |
| Father's/Husband's Name | : | **கந்தசாமி** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.03.2025.

**Accused 1- 2 present. A3 absent. 317 petition filed and allowed.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது திருப்பத்துார் மாவட்டம் நக்சலைட் தடுப்பு சிறப்புப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.07.2018 அன்று காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் இருந்தபோது காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி அ.சா.1 ரேணுகாதேவி வட்டாட்சியரிடம் புகாரை பெற்று நிலைய குற்ற எண். 1082/2018, இதச பிரிவுகள் 294(பி), 353, 307 -ன் கீழ் வழக்கு பதிவு செய்த கோப்பை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் திருமலை, காமராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5.** பின்னர் சாட்சிகள் ரேணுகா, தசரதன், பச்சையப்பன், கோபிநாத், சக்திவேல், பட்டுசாமி, ராஜாராம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துகொண்டேன். எதிரி சிலம்பரசனை பற்றி கிடைத்த இரகசிய தகவலின்படி திருவண்ணாமலை - அபய மண்டபம் அருகில் பகல் 12.30 மணிக்கு அங்கு நின்றிருந்த எதிரி சிலம்பரசனை கைது செய்து அவர் தானாக

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மணி, ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் காஞ்சி ரோடு கலர்க்கொட்டாய் கிராமம் ஓடை அருகே மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய பதிவெண் TN 67D0140 என்ற டிப்பர் லாரியை எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். **அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6.** அதே சாட்சிகளின் முன்னிலையில் காஞ்சி ரோடு கலர்க்கொட்டாய் கிராமம் ஓடை அருகே மறைத்து வைத்திருந்த மேற்படி டிப்பர் லாரியை எதிரி அடையாளம் காட்ட சாட்சிகள் முன்னிலையில் நான் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய போது அந்த லாரியில் 2 யூனிட் ஆற்று மணல் இருந்தது. தற்போது காணொலி மூலம் காட்டப்படும் இந்த லாரியை தான் நான் கைப்பற்றியது. (லாரியின் என்ஜின் இயங்காத நிலையில் இருப்பதால் எங்களால் ஆஜர்படுத்த இயலாது என்று எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது) **அந்த லாரி சா.பொ.1**. **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7. என்னிடம் காட்டப்படுவது நான் கைப்பற்றிய லாரியின் புகைப்படங்கள் அ.சா.ஆ.8** (2 எண்ணிக்கை). அதன்பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். எதிரி அனுமதியின்றி 2 யூனிட் ஆற்று மணலை திருடி கொண்டு வந்ததாக சொன்னதால் இவ்வழக்கை இதச 294(பி), 353, 307 என்பதை இதச 294(பி), 353, 307, 430, 379 ன் படி பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9.** பின்னர் சாட்சிகள் ரமேஷ், மணி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

(2)அதன்பின்னர் 30.09.2018 ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு திருவண்ணாமலை டு செங்கம் செல்லும் ஜங்ஷனிடம் நின்றிருந்த தலைமறைவு எதிரி விஜயகாந்த் என்பவரை கைது செய்து காலை 11.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 26.11.2018 ம் தேதியன்று தலைமறைவு எதிரி செல்வராஜ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று திருவண்ணாமலை குற்றவியல் நீதித்துறை நடுவர் 2 ல் முன்ஜாமீன் பெற்று சென்றுவிட்டார். பின்னர் விசாரணை முடித்து எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 294(பி), 353, 307, 379, 430 ன் படி இறுதியறிக்கை தயார் செய்தேன். அதன்மீது அரசு வழக்கறிஞரின் ஒப்புதல் பெற்றபோது அவர் இதச 430 ன் கீழான குற்றத்தை நீக்க அறிவுரை செய்ததால் பிரிவு மாற்றம் செய்து பிரிவு 430 யை நீக்கிவிட்டு இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **அந்த பிரிவு மாற்றுதல் அறிக்கை அ.சா.ஆ.10.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

(1) நான் சம்பவயிடத்தை காலை 11.00 மணிக்கு பார்வையிட்டேன். நான் சம்பவியிடத்திற்கு சென்று பார்த்தபோது லாரி அங்கில்லை. இந்த வழக்கின் புகாரை நான் படித்து பார்த்தேன். அந்த புகாரில் வட்டாட்சியர் அந்த லாரியை பின் தொடர்ந்து சென்றபோது ஆடையூர் கலர்க்கொட்டாய் அருகில் லாரி சாலையில் இடதுபக்கம் இருந்த பள்ளத்தில் இறங்கிவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான்

சொல்வதுபோல் எதிரி சிலம்பரசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் லாரியை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த லாரியை 24.07.2018 அன்று இரவே காவல் நிலையத்திற்கு கொண்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. லாரியில் மணல் தான் கடத்தி வந்தார்கள் என்பதை உறுதி செய்ய மணலை ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். மணலை நான் பொதுப்பணித்துறையில் ஒப்படைத்தற்கான இரசீதை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிற்கு பிறகு புகார்தாரரான வட்டாட்சியர் ரேணுகாதேவி மணல் சம்மந்தமான வழக்கில் இலஞ்சம் வாங்கியதாக கைது செய்யப்பட்டு தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. புகார்தாரர் சம்பவம் நடந்த அன்று இரவு 2.00 மணிக்கு புகார் கொடுத்தார் என்றும், அதை நான் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் லாரியில் மணல் இருப்பதாக தவறாக நினைத்துக்கொண்டு லாரியின் ஒட்டுனரை தன்னுடன் வந்த அடியாட்களை வைத்து தாக்கினார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அதனால் அந்த ஓட்டுனர் வருவாய் ஆய்வாளர் மீது புகார் கொடுத்துவிடுவார் என்ற எண்ணத்தில் வா.சா.1 கொடுத்த தவறான புகாரை சரியாக விசாரணை செய்யாமல் புகார் கொடுத்தவர் அரசு ஊழியர் என்பதால் எதிரியின் மீது ஒரு தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அரசு ஊழியர்கள் அவர்கள் செய்யும் பணியை செய்யவிடாமல் தடுத்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் மணல் திருடவில்லை என்றும், ஒரு பொய் புகாரின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு எந்தவிதமான காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**